# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 29. வாகன சீர்மையகங்கள் மற்றும் தூய்மிப்பகங்கள் *(Garage)*

**விளக்கம்** – வாகன சீர்மையக மற்றும் தூய்மிப்பகங்களின் *(Garage)* பணியாளர்கள் வாகன திருத்தங்கள், உட்பக்க மற்றும் வெளிப்புறத் தூய்மிப்பு போன்ற சேவைகளை வழங்குவதுடன் அவர்கள் வாடிக்கையாளர்களுடனும் தொடர்புபடுகிறார்கள்.

**பிரத்தியேக வழிகாட்டல்கள்**

**வேலை வழங்குனர்கள்;**

- போதுமான பாதுகாப்பு சாதன வழங்கல்கள் கையிருப்பில் இருக்க வேண்டும் (உதாரணம்: முகக்கவசங்கள், தொற்றுநீக்கிகள், சவர்க்காரம் மற்றும் நீர் வழங்கல்).
- தொழிலாளர்களின் எண்ணிக்கையை முடிந்தவரை குறைவாகப் பேணுங்கள்.
- ஊழியர்களின் உடல்நலம் குறித்து தினமும் விசாரிக்கும் முறையை பின்பற்றுங்கள் (காய்ச்சல் மற்றும் இருமல் / சளி போன்ற சுவாச அறிகுறிகளைக் கேளுங்கள்).
- ஆரோக்கிய நடத்தைகள் குறித்து தொழிலாளர்களுக்கு அறிவுறுத்துங்கள்.
- கை கழுவுவதற்குப் போதுமான வசதிகளை வழங்குக. வாடிக்கையாளருடன் நேரடியாக சந்திக்கும் சந்தர்ப்பங்களின்போது பணியாளர்கள் முகக்கவசங்களை அணியலாம்.
- வழங்கப்பட்ட□உத்தரவாத□படிவத்தை□நீங்கள்□நிரப்ப□வேண்டும்□□இது□கொடுக்கப்பட்ட □வழிமுறைகளுக்கு□இணங்குவதைக்□குறிக்கிறது□□உத்தரவாத□படிவத்தின்□அசல்□சுகாதார □மருத்துவ□உத்தியோகஸ்தரிடம்□□சமர்ப்பிக்கப்பட□வேண்டும்□□அதன்□நகலை□அரச□உள் ளூர்□அதிகார□சபைக்கு□□நகராட்சி□மன்றம்□□□நகர□சபை□□□பிரதேசிய□சபை□□□அனு ப்ப□வேண்டும்□மற்றும்□மற்றைய□நகலை□நீங்கள்□வைத்திருக்க□வேண்டும்□□மேலே□உள் ளி□வழிகாட்டுதல்கள்□கண்டிப்பாக□கடைபிடிக்கப்படுகின்றன□என்பதை□உறுதிப்படுத்துவது□ அமைப்பு□அல்லது□வளாக□□உரிமையாளரின்□□□வேலை□வழங்குனரின்□□□மேலாளரின் □□பொறுப்பு□□ஆகும்□

**ஊழியர்கள்**

- வேலைத்தலத்தினுள் நுழைவதற்கு முன்னரும் /அங்கிருந்து வெளியேறும்போதும் ஆகக் குறைந்தது 20 வினாடிகளுக்கு சவர்க்காரம் மற்றும் தண்ணீர் உபயோகித்துக் கைகளைக் கழுவ வேண்டும். பணியில் ஈடுபடும்போதும் அடிக்கடி கைகளைக் கழுவிக் கொள்ளல் வேண்டும்.
- எப்போதும் மற்றையவர்களில் ( சக ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களில்) இருந்து குறைந்தது ஒரு மீற்றர் உடல் இடைவெளியைப் பேண வேண்டும்.
- வாய், மூக்கு அல்லது கண்களை அடிக்கடி தொடுவதைத் தவிர்க்க வேண்டும்.
- பணியிடத்தில் துப்பக்கூடாது.
- முகக்கவசங்களை சரியாக அணிய வேண்டும் மற்றும் அவற்றினை மூடி கொண்ட குப்பைத் தொட்டியினுள் மட்டுமே வீச வேண்டும்.
- இருமுவதற்கும் தும்முவதற்குமான சரியான வழிமுறையினை அறிந்திருக்க வேண்டும். அதாவது இருமும் போது அல்லது தும்மும் போது உங்களது வாய் மற்றும் மூக்கினை முழங்கையின் உட்பக்கத்தால் மறைத்துக் கொள்ள வேண்டும்.
- வாகனங்களை வாடிக்கையாளரிடம் ஒப்படைப்பதற்கு முன்னதாக கதவுக் கைப்பிடிகள், கடவற்சக்கரம் ஆகியவற்றினைத் தொற்றுநீக்கிகளைப் பாவித்துச் சுத்தம் செய்ய வேண்டும்.
- உங்களுக்கு சுவாச நோய் அறிகுறிகளான காய்ச்சல், மூக்கினால் நீர் வடிதல், தொண்டை நோவு அல்லது இருமல் ஆகிய ஏதேனும் இருந்தால், வேலைத் தலத்துக்கு செல்லவேண்டாம்.
- புகைத்தல் தடைசெய்யப்பட வேண்டும்.

**வாடிக்கையாளர்கள்**

- முகக்கவசத்தைச் சரியாக அணியுங்கள்.
- உங்களுக்கு மெலிதான சுவாச நோய் அறிகுறிகள் இருந்தாலும் வாகன சீர்மையகத்தினுள்/

தூய்மிப்பகத்தினுள் நுழையக்கூடாது.

- சாத்தியமான சகல சந்தர்ப்பங்களிலும் வாகன சீர்மையகத்தினுள்/ தூய்மிப்பகத்தினுள் நுழைவதற்கு முன்பு கைகளைக் கழுவவும்.
- எப்போதும் ஒரு மீற்றர் உடல் இடைவெளியைப் பேணவும்.

**அறிவுறுத்தும் முறைகள்**

- சீர்மையகங்கள் மற்றும் தூய்மிப்பகங்களின் நுழைவாயிலில் /அனைத்துப் பணியாளர்களும் நன்கு பார்வையிடக்கூடிய இடங்களில் பதாகைகள்/ சுவரொட்டிகள் ஆகியவற்றினைப் பயன்படுத்தி சுகாதாரச் செய்திகளை காட்சிப்படுத்தலாம்.




**சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்**

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020